1990 ஆகஸ்ட் 23]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

100—

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி.

வினா 6823—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. வகுப்பு ஆரம்பிக்க அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் முடிவுற்றன.)

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு பற்றி, மற்ற மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது சபைக்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பம். அது என்னவென்றால், கர்நாடக மாநிலத்தில் மைசூரில் மூன்று முதலமைச்சர்கள் அதாவது மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களின் மூன்று முதலமைச்சர்கள் சேர்ந்து கிருஷ்ணா நதியில் வரக்கூடிய சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பங்கு போடுவது என்று பேசி, அவர்கள் மூன்று பேரும் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். ஏற்கனவே நமக்கு பங்கு போடுவதற்கு இங்கே தெலுங்கு கங்கை திட்டம் இருந்துக்கொண்டிருக்கிறது. அதையும் அவர்கள் கலந்து பேசினால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும்.

இதைப் பற்றிய பேச்சுக்கே அங்கே இடம் இல்லை. இதைப் பற்றியும் பேசாமல் அர்கள் மூன்று பேர் மட்டும் இன்றைக்கும் கிருஷ்ணா நதித் திட்டம், சர்ப்ளஸ் வாட்டரைப் பற்றிப் பேசி ஏதோ முடிவு எடுத்து இருக்கிறார்களாம். அதைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சங்கூட தாமதம் இல்லாமல், நல்ல முடிவு எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது வேறு பிரச்சினை. அது அவர்களுக்குள்ளே உள்ள பங்கீடு பற்றி. இது ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கு-கங்கைத் திட்டம் தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னை மாநகருக்குத் தண்ணீர் விடுவது குறித்த திட்டமே வேறானது. இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : கேள்வி நேரமா இது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரமெல்லாம் முடிந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

(ஆ) சென்னை மத்திய சிறையிலிருந்து, சில கைதிகள் தப்பியோடி விட்டது குறித்துப் போடப்பட்டுள்ள நீதி விசாரணை குறித்தும், சந்தன மரம் கடத்தல் செய்யும் வீரப்பன், தமிழ் நாட்டிலிருப்பதாக வந்துள்ள செய்தி குறித்தும்.

9-55 மணி

* திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக மிகவும் பரபரப்பாகத் தமிழகத்திலே பேசப்படுகின்ற செய்தி, ஆட்டோ சங்கர் சிறையிலே இருந்து தப்பிவிட்ட செய்தி, மிகவும் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. அவன் ஒரு பயங்கரமான குற்றவாளியாகக் கருதப்பட்டான். Eventhough he was not a condemned prisonerஅவன் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்தான் சிறையிலேவைத்து இருக்கப்பட வேண்டும். சாதாரணமாக மாலையிலே செல்லைப் பூட்டுவதற்கு முன்னால், ரோல் கால் எடுத்து செல்லைப் பூட்டி, அந்தச் சாவிகளை எல்லாம் டவரிலே ஒப்படைத்து இருக்க வேண்டும். அதற்குப் பிறகு மீண்டும் 3 மணி நேரத்துக்கு ஒரு முறை அசிஸ்டன்ட் ஜெயிலர் ரவுண்ட் வந்து சரிபார்த்து ரிஜிஸ்டரிலே கையெழுத்துப் போட வேண்டும். இதற்கெல்லாம் மீறி அவன் தப்பித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அவனோடு அவனுக்குப் பிடிக்காத இன்னுமொரு கைதியும் அதே செல்லில் இருந்திருக்கிறான். அகரம்